**கொழும்பு மாநகர சபை - 2023**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

கொழும்பு மாநகர சபையின் 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த 1.6 அறிக்கையின் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க கொழும்பு மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கொழும்பு மாநகர சபையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு

அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் 1.6 ஆம் பந்தியின் 1.6.1(ii) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.**

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆண்டின் நிர்மானங்கள் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்தப்பட்ட நிலையமிடல் முற்பணம் மற்றும் ஒப்பந்தங்களுக்காக இடைக்கால கொடுப்பனவுகளை உள்ளடக்கிய ரூபா 1,913,188,795 ஆன நடைமுறை வேலைகள் நியமத்தின் வழிகாட்டல்களின் EG 3.1 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண பட்டோலையில் தனியான தலைப்பாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | நியமத்தின் பிரகாரம் நடைமுறை வேலைக் கணக்கின் மூலம் நடைமுறை வேலைக்காக கொடுப்பனவுகள் கணக்கீடு செய்ய வேண்டி இருந்ததுடன் நிர்மாணங்கள் பூர்த்தி செய்து இறதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட பின்னர் நிலையான சொத்துக் கணக்கிற்கு மாற்றப்படல் வேண்டும். |
| (ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கி கடனின் கீழ் கொழும்பு மாநகர சபையில் மூலம் அகற்றல் முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 18,678,077,179 தொகை 2023 டிசம்பர் 31 ஆம் திகதி முதலீடு செய்யப்பட்டமை தொடர்பாக நியமத்தின் 3.20 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை கணக்கீடு செய்தல் குறித்துரைத்த வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மக்கள் வங்கியில் பேணிச் செல்லப்படுகின்ற இரண்டு நடைமுறைக் கணக்குகளின் காசேட்டின் பிரகாரம் ரூபா 704,942,158 கூட்டுமொத்தமாக இருந்த போது 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்ட தொகை ரூபா 725,056,999 ஆனமையால் ரூபா 20,271,585 அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை | மக்கள் வங்கிக் கணக்கு மற்றும் மீதிகள் புத்தகங்களுடன் ஒப்பிட்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நானாவித கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்யும் போது ஏற்பட்டிருந்த கடன்கொடுத்தோர் மற்றும் ஒப்பந்த கொடுப்பனவின் அடிப்படையில் ஏற்பட்டிருந்த கடன் கொடுத்தோர்களின் கூட்டுமொத்தம் ரூபா 940,454,269 மீளாய்வாண்டில் திரண்ட நிதியத்திலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | கடன்கொடுத்தோர் தன்மையினை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சில் இருந்து புதிய 13 தீயணைப்பு வண்டிகள் பெறப்பட்டதன் காரணமாக கொழும்பு மாநகர சபையில் பயன்படுத்தப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 123,105,831 ஆன 15 தீயணைக்கும் வண்டிகள் 2022 ஆம் ஆண்டின் போது உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்குகளில் சீராக்கம் மேற்கொள்ளல் 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டதாக நகர ஆணையாளரால் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுப்பெறுமதி ரூபா 85,993,586 ஆன 08 தீயணைப்பு வண்டிகளுக்குரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | கையளிக்கப்பட்ட 08 வண்டிகளின் கிரயத்தை இனங்கண்டு அதன் கிரயம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளித்து சரியான பெறுமதி கணக்குகளில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | நூலக புத்தகங்களுக்காக பெறுமானத் தேய்வு வீதம் 10 சதவீதமாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நூலக புத்தகம் நிலையான சொத்தொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. நடப்பாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 11,952,410 ஆன | பதிலளிக்கப்படவில் லை | சரியாக கணக்கீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

புத்தக கொள்வனவுகளின் கிரயம் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | விடயங்கள் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணக் கணக்கு முறைமையில் நிலையான சொத்து மொடியூல் | 22,427,931,916 | விரிவான தகவல்கள் | பதிலளிக்கப்பட வில்லை | கணக்கீட்டு தகவல் முறைமையில் நிலையான சொத்து மொடியூலின் சொத்துக்கள் தொடர்பான விரிவான தகவல் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய வைப்புக் கணக்குகள் 29 | 3,677,669,861 | ஆவணங்கள் | மேற்படி | சான்றுறுதிப் படுத்துவற்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | முற்கொடுப்பனவுகள் | 16,566,011 | உறுதிப்படுத்தும் சான்றுகள் | மேற்படி | உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | முற்பணத் தொகை | 2,910,316 | சம்பள முற்பணம் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அல்லது ஊழியர்களின் விபரங்களை உள்ளடக்கிய தகவல்கள் | மேற்படி | மேற்படி |
| (உ) | கையிலுள்ள காசு மற்றும் காசோலை | 9,288,091 | மீதி உறுதிப்படுத்தல் | மேற்படி | கணக்காய்விற்கு மீதி உறுதிப்படுத்தும் கடிதம் சமர்ப்பிக்கப் படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாய சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| i. | VIII அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | பொதுச் சந்தைகளில் கடை நிருவகிப்பாளர்கள் இருவரும் கடமையில் ஈடுபட்டிருக்கின்ற போது எந்த ஒரு அடிப்படையும் இன்றி 2023 டிசம்பர் மாதம் மாத்திரம் ரூபா 87,671 தொகை அத்தியவசியமற்ற மேலதிக நேரத்திற்காக செலுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை. | அடிப்படை இன்றி மேலதிக நேரம் வழங்காமல் செலவினங்கள் கட்டுப்படுத்தப்படல் வேண்டும். |
| ii. | XXII அத்தியாயத்தின் 22.4 ஆம் பிரிவு | நகர செயலாளர் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்ட 20 பேர்களுக்கு 2023 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறை தொடர்பான அறிக்கை கணக்காய்விற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை | பதிலளிக்கப்பட வில்லை. | சம்பளமற்ற விடுமுறை தொடர்பான தகவல்கள் பொது 96 இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை ஜனநாய சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 570 நிதிப்பிரமாணம் 571 | நீண்ட காலம் முதல் மாற்றம் இன்றி காணப்படுகின்ற கூட்டுமொத்தமான ரூபா 229,964 ஆன 09 வைப்புக்களின் பெறுமதி ஓய்வுபெறச் செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ஜனாதிபதி செயலாளரின் 1995 யூலை 12 ஆம் திகதிய இலக்கம் SEI/A/4/34 என்ற | தனியார் தரப்பினருக்கு வாடகைக்கு வழங்குகின்ற காணிகள் தொடர்பாக உடன்படிக்கை புதுப்பித்தல், நிலுவைப் பணத்தை சேகரிக்காதிருப்பதைக் | மேற்படி | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் வாடகை ஆதனங்கள் தொடர்பாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 9 ஆம் பிரிவு | கண்காணித்தல், உடன்படிக்கை நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதை மேற்பார்வை செய்தல் மற்றும் நிபந்தனைகளை மீறியுள்ள சந்தர்ப்பங்களின் ஆதனங்களின் உரித்தை மீளக் கையேற்றல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2023 டிசம்பர் 31 ஆந் திகதி நிலுவை வாடகை ரூபா 111,335,194 ஆக காணப்பட்டது. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அரச நிர்வாக சுற்றறிக்கை | | | |
| i. | 1999.10.08 ஆம் திகதிய இலக்கம் 22/99 மற்றும் 2016.03.09 ஆம் திகதிய இலக்கம் 5/2016<br><br>2007.08.08 ஆம் திகதிய இலக்கம் 19/2007<br><br>2007.10.23 ஆம் திகதிய இலக்கம் 23/2007<br><br>2008.06.26 ஆம் திகதிய இலக்கம் 14/2008<br><br>2016.09.07 ஆம் திகதிய இலக்கம் 05/2016(1) | உத்தியோகப்பூர்வ வாகனங்களுக்காக உரித்தின்றிய பதவிகளுக்காக பிரதான ஆயர்வேத மருத்துவ உத்தியோகத்தருக்கு சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு முரணாக 2023 ஆகஸ்ட் முதல் 2024 ஜனவரி வரையான காலப்பகுதியில் ரூபா 588,630 போக்குவரத்துப் படி செலுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கைகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகளை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | 1999.10.08 ஆம் திகதிய இலக்கம் 22/99 என்ற சுற்றறிக்கையின் 1 ஏ உப பந்தி மற்றும் 2017.11.07 ஆம் திகதிய இலக்கம் 22/99(XXXIII) என்ற சுற்றறிக்கை | கொழும்பு மாநகர சபையின் விசேட ஆணையாளரின் 2010 செப்டம்பர் 17 ஆந் திகதிய 1231 என்ற தீர்மானம் மூலம் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தின்றிய பதவிகளில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற இலங்கை பொறியியலாளர் சேவையில் முதலாவது வகுப்பின் 27 உத்தியோகத்தர்களுக்கும், கணக்காளர் பதவிகளில் உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்குவதற்கும் ரூபா 350 | மேற்படி | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை அறவிட்டு நகர எல்லையினை கவனத்தில் கொள்ளாமல் தனிப்பட்ட பாவனைக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,940,432,774 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,905,893,767 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பேணிச் செல்லப்படுகின்ற 03 நடைமுறைக் கணக்குகளுக்கு உரிய ரூபா 60,252,835 ஆன நேரடியாக மற்றும் பிழையாக செலவு வைத்தல்களும் 05 கணக்குகளுக்கு உரிய ரூபா 14,662,980 ஆன நேர் மற்றும் பிழையான வரவு வைத்தல்களும் இனங்காணப்பட்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | நேர் அல்லது பிழையாக வரவு வைத்தல் மற்றும் செலவு வைத்தல்களை இணங்கண்டு விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021, 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய தேறாத ரூபா 1,320,517 ஆன 50 வைப்புக்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | தேறாத வைப்புக்களுக்கு உரிய பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | விநியோகிக்கப்பட்ட போதும் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 25,144,846 பெறுமதியான 511 காசோலைகள் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நகர அபிவிருத்தி செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட வங்கிக் கணக்கில் வைப்பில் காணப்பட்ட தொகையில் இந்தப் பணத்தில் ரூபா 766,951,035 நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தை அமுல்படுத்தாமல் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2023 செப்டம்பர் 30 இல் உள்ளவாறு வங்கிக் கணக்கு மீதி ரூபா 134,950,233 ஆக இருந்தது. | மேற்படி | நகர அபிவிருத்தி கணக்கில் பேணிச் செல்லப்படும் மீதி அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா. மில்லியன் | சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா. மில்லியன் | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா. மில்லியன் | டிசம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா. மில்லியன் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா. மில்லியன் | சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா. மில்லியன் | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா. மில்லியன் | டிசம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா. மில்லியன் |
| (i) | வுரிப்பணம் மற்றும் குத்தகை | 7,366.5 | 5,430.3 | 5,565.7 | 4,492.1 | 5,160.5 | 4358.4 | 4,166.2 | 4,368.2 |
| (ii) | வாடகை | 319.8 | 309.2 | 226.6 | 1,235.1 | 335.8 | 271.9 | 191.7 | 1,177.8 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணம் | 126.3 | 162.2 | 98.6 | 4.5 | 221.9 | 89.9 | 67.6 | 1.8 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,714.6 | 2,093.8 | 1,841.3 | 438.2 | 3,511.6 | 1,318.7 | 1,052.2 | 679.6 |
| | மொத்தம் | 10,527.2 | 7,995.2 | 7,732.2 | 6,169.9 | 9,229.8 | 6,038.9 | 5,477.7 | 6,227.4 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆதனவரியும் வரியும் | | |
| i. 2023 ஜனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 4,316,776,152 ஆன நிலுவை ஆதனவரி மற்றும் வரித்தொகையில் நடப்பாண்டின் போது ரூபா 933,100,725 அதாவது மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் நிலுவையாகக் காணப்பட்ட ஆதனவரிகளில் இருந்து 22 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. ஆண்டில் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவைத் தொகையில் ரூபா 933,100,725 அறவிடப்பட்ட போதும் மீளாய்வாண்டிற்குரிய நிலுவைப் பணம் ரூபா 1,353,476,656 ஆனமையால் ஆதனவரி நிலுவைத் தொகை அதிகரித்துக் காணப்பட்டது. அதன் பிரகாரம் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது. முன்னைய ஆண்டுகளின் ஆதன வரி நிலுவை | பதிலளிக்கப்பட வில்லை | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படும் போது மீளாய்வாண்டின் ஆதனவரித் தொகையைச் செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டமையும் நிலுவைப் பணம் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. | | |
| ii. | வங்கி மூலம் ஆதன வரி செலுத்தும் போது ஆதனங்கள் தொடர்பான சரியான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக நிதி கையேற்கின்ற வங்கியில் பணம் அறவிடுபவரால் பரீட்சிக்கப்பட்டு பணத்தை கையேற்று உரிய பிரகாரம் மேற்கொள்வதற்காக ஆதனவரி பணத்தை கையேற்கின்ற வங்கியுடன் உடன்படிக்கை செய்து இணக்கப்பாட்டிற்கு இதுவரை வராதிருந்தமையால் 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனவரி சேகரித்தலில் நிச்சயமற்ற மீதி ரூபா 2,921,660 ஆகக் காணப்பட்டது. | பதிலளிக்கப்பட வில்லை. | ஆதனவரி கையேற்றல் தொடர்பாக வங்கியுடன் உடன்படிக்கை செய்து இணக்கப்பாட்டிற்கு வருதல் வேண்டும். |
| iii. | மீளாய்வாண்டில் ரூபா 167,450,662 ஆன களியாட்ட வரி வருமானம் முன்னைய ஆண்டில் ரூபா 128,147,498 ஆன களியாட்ட வரி வருமானத்துடன் ஒப்பீடு செய்யும் போது 30 சதவீத அதிகரிப்பாகும். 2023 ஆம் ஆண்டில் ரூபா 80,000,000 ஆன பாதீடு செய்யப்பட்ட வருமானத்தைத் தயாரிக்கும் போது நியாயமான களியாட்ட வரி வருமானம் மதிப்பீடு செய்யப்படாமல் வருமான முரண் 109 சதவீதத்தை விட அதிகரித்திருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை | சாத்தியமான மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| iv. | 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 51,428,430 ஆன நிலுவைக் களியாட்ட வரித் தொகை 2023 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 77,513,277 வரை அதிகரித்து இருந்ததுடன் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவையில் ரூபா 11,256,465 அறவிடப்பட்டிருக்கும் போது நிலுவைத் தொகை உயர்வடைந்து செல்வதற்கு சிட்டையிடப்பட்ட வருமானம் சேகரித்தலில் நலிவாக இருந்தமையும் தாக்கமளித்திருந்தது. | மேற்படி | நிலுவைத் தொகையும், ஆண்டில் சிட்டையிடப்பட்ட வருமானமும் ஆண்டின் போது சேகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| v. | கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற செயற்படு நிலையில் காணப்படுகின்ற சினிமா திரையரங்குகளுக்காக மூன்று சந்தர்ப்பங்களின் போது விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் காட்சிப்படுத்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் வருடாந்தம் அனுமதிப் பத்திரம் பெறவேண்டியிருந்த போதிலும் 34 சினிமா திரையரங்குகளில் 10 இற்கு 2023 ஆம் ஆண்டுக்காக அந்த அனுமதிப் பத்திரம் பெறப்படாமல் நாளாந்த கண்காட்சி நடவடிக்கைகளும் | மேற்படி | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நாளாந்த காட்சி நடவடிக்கைகளும் 1984 இன் 37 ஆம் இலக்க களியாட்ட வரி (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1946 இன் 12 ஆம் இலக்க களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் 6, 12 மற்றும் 14 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (vi) | 1984 இன் 37 ஆம் இலக்க களியாட்ட வரி திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1946 இன் 12 ஆம் இலக்க களியாட்ட வரி சட்டத்தினால் வெளியிடப்பட்ட களியாட்ட நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்ற உள்நுழைவுக் கட்டணம் அறவிடப்படுகின்ற வரி கூற்று மற்றும் நிபந்தனைகள் எதிர்வரும் ஆண்டிற்காக மீண்டும் விதிப்பதற்கு அந்த கட்டளைச் சட்டத்தின் 2(1) உப பிரிவின் பிரகாரம் 2022 பெப்ரவரி 10 ஆந் திகதி இலக்கம் 1793 சபைத் தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்ட களியாட்ட வரிக்காக மேல் மாகாண ஆளுநரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளவதற்காக அனுப்பப்பட்ட போதிலும் அது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்காமையின் காரணமாக அறவிடப்பட்ட சட்டரீதியற்றதாகும். | மேற்படி | மாநகர சபையினால் சட்ட ரீதியாக களியாட்ட வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| i. | 2023 ஆம் ஆண்டின் பொதுச் சந்தையின் வாடகை மற்றும் இறைச்சிக் கடைகளுக்கான கேள்வித் தொகை ரூபா 114,518,769 ஆகும். கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான 14 பொதுச் சந்தைகளில் இறைச்சிக் கடைகள் தவிர்ந்த கடைகள் மற்றும் திறந்த வியாபார கொட்டகைகள் 1314 காணப்பட்ட போதிலும் அதில் 1118 கடைகள் வாடகைக்கு வழங்கக்கூடியதாக இருந்ததுடன் 196 கடைகள் விளைவற்றுக் காணப்பட்டது. வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகள் 2023 ஆம் ஆண்டிற்காக அறவிட வேண்டிய வாடகை ரூபா 214,744,398 ஆக இருந்ததுடன் அறவிடப்பட்ட வாடகை ரூபா 50,000,294 ஆனமையால் மீளாய்வாண்டிற்கு மாத்திரம் நிலுவை வாடகை ரூபா 164,744,104 ஆகும். அதன் பிரகாரம் வாடகை அறவிடலின் வீதம் 23 சதவீதமாக அறவிடல் நலிவான நிலையில் இருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை | மாநகர சபைக்குச் சொந்தமான ஆதனங்களில் இருந்து கிடைக் வேண்டிய வருமானத்தை சேகரிப்பதற்கு உத்தியோகத்தர்கள் முன் நிற்றல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii. | நகர சபையின் 397 உத்தியோக பூர்வ இல்லங்களில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் அனுமதியற்ற வகையில் குடியிருந்து வருவதுடன் அந்த வீடுகளுக்காக ரூபா 3 முதல் ரூபா 200 வரையான வாடகை வீச்சில் மாதாந்த வாடகை நிலுவையாகக் கருதி 2023 ஆம் ஆண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபா 180,043 ஆகும். எனினும் அந்த வீடுகளை மீண்டும் கைப்பற்றுவதற்காக போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | வீடுகளை மீண்டும் கையேற்று காணிகளை விடுவிப்பதற்காக நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக முன்னுரிமை வழங்கல் வேண்டும். |
| iii. | சபைக்குரிய வியாபார நிலையங்களிலிருந்து வாடகைப் பணம் அறவிடுதல் மற்றும் வாடகை செலுத்தாத கடைகளை மீண்டும் கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் ரூபா 98,495,941 ஆன நிலுவை வாடகை 2023 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 103,116,196 அதாவது ரூபா 4,620,255 இனால் அதிகரித்துச் சென்றமையால் வாடகை அறவிடுதல் நலிவான செயல் முன்னேற்றத்தை உறுதிப்படுத்தியது. | மேற்படி | வாடகை செலுத்தாத வியாபார நிலையங்கள் தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கைகள் விரைவாக எடுத்தல் வேண்டும். |
| iv. | மீளாய்வாண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்ட நடைபாதை கடை வாடகை வருமானம் ரூபா 142,420,482 ஆக இருந்ததுடன் ரூபா 93,459,797 மாத்திரம் ஆண்டில் பணமாக கிடைத்திருந்தது. தொடர்ச்சியாக ஆண்டில் குறித்துரைத்த வாடகை கிடைக்காமையின் காரணமாக நிலுவை வாடகை ரூபா 655,040,434 ஆக இருந்தது. | மேற்படி | நபர்களை இனங்காணாமல் போலியாக வாடகை கணக்கீடு செய்வதை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| (i) | மீளாய்வாண்டிற்காக அனுமதிப் பத்திரக் கட்டண வருமானம் ரூபா 53,269,000 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் ரூபா 19,748,912 ஆன அனுமதிப் பத்திரக் கட்டண வருமானத்தை விட ரூபா 33,520,088 அதாவது நூற்று எழுபது சதவீத (170%) அதிகரிப்பு கைப்பற்றப்பட்டிருந்த போதும் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247(அ) பிரிவின் பிரகாரம் அந்த சட்டத்திலோ அல்லது கட்டளைச் சட்டத்தின் கீழோ வழங்கப்படுகின்ற உப விதி ஒன்று அல்லது விபரிக்கப்பட்டுள்ள பணிகளுக்காக நிலையம் ஒன்றை பயன்படுத்துவதற்கு அனுமதிப் பத்திரம் வழங்க வேண்டியிருந்த போதிலும் உபவிதி அங்கீகரித்துக் கொள்ளப்படாமல் சட்டத்திற்கு முரணமக அனுமதிப் பத்திரம் | மேற்படி | ஏனைய அதிகாரத் தரப்பின் கீழ் கட்டுப்படுத்தபடாத சகல வியாபர வகைகளுக்காகவும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உபவிதிகள் அங்கீகரித்து அனுமதிப் பத்திரம் வழங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விநியோகிக்கப்பட்டு கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | | |
| (ii) | மீளாய்வாண்டின் வியாபார வரி வருமானம் ரூபா 60,718,500 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் ரூபா 32,084,750 ஆன வியாபார வரி வருமானத்தை விட ரூபா 28,633,750 இனால் அதாவது எண்பத்து ஒன்பது சதவீதம் (89%) அதிகரிப்பு கைப்பற்றப்பட்டிருந்த போதிலும் மாநகர சபை உப விதி ஒன்றை அங்கீகரித்து அதன் பிரகாரம் அங்கீகரித்து அதன் பிரகாரம் அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் வியாபார வரி ஒன்றை அறவிட்டதன் காரணமாக மாநகர சபைகளின் கட்டுப்பாடு இன்றி வியாபாரங்கள் நடத்திச் சென்றதன் காரணமாக நுகர்வோர்களுக்கு தரமான, சுகாதாரப் பாதுகாப்பான பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்காமை மற்றும் நியாமற்ற தன்மைகளுக்கு உட்படல் பொதுமக்களை சுரண்டுதல் சுகாதார மோசடிகள் ஏற்பட்டமை, வாகன நெருக்கடி போன்ற பிரச்சனைகளால் அனுமதிப் பத்திரம் இன்றி வியாபார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை. | மாநகர சபையின் உப விதி ஒன்றின் கீழ் அனுமதிப் பத்திரம் பெறாத வியாபாரங்களில் இருந்து வியாபார வரி அறவிடப்படல் வேண்டும். |
| **(ஈ)** | **ஏனைய வருமானம்** | | |
| (i) | 2023 ஆம் ஆண்டிற்கான அறிவித்தல் பதாதை காட்சிப்படுத்தல் வருமானம் ரூபா 87,379,967 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் ரூபா 42,699,478 வருமானத்துடன் ஒப்பிடும் போது 104 சதவீத அதிகரிப்பு ஒன்றை காண்பிக்கப்பட்டிருந்த போதும் கொழும்பு நகரில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல் பதாதைகளின் சட்ட ரீதியாக அறவிடக்கூடிய கட்டணத்தை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை | கொழும்பு நகரத்தில் அறிவித்தல் பதாதை கணிசமான எண்ணிக்கையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மாநகர சபைக்கு சிறு வருமான அளவே கிடைக்கின்றமையால் உப விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி அமைச்சரால் விநியோகிக்கப்பட்ட 2011 யூலை 05 ஆம் திகதிய இலக்கம் 1713/10 என்ற அதிவிசேட வர்த்தமாணி பத்திரத்தில் பகிரங்கப்படுத்தப்பட்ட கொழும்பு மாநகர சபையின் விளம்பர அறிவித்தல் தொடரபான உப விதியின் மூலம் விளம்பர அறிவித்தலுக்காக கட்டணம் தீர்மானிக்கப்பட்டதுடன் ஆணையாளரால் 2017 ஆம் ஆண்டில் குறித்துரைத்த கட்டணம் ஒன்று அறிவிடப்படுகின்ற போதிலும் அந்த கட்டணம் சட்ட ரீதியாக்கிக் கொள்வதற்காக எந்த ஒரு | மேற்படி | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சட்ட ரீதியாக பகிரங்கப்படுத்தி அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (iii) | மீளாய்வாண்டில் வணிக மற்றும் தொழிற்சாலைகளில் மலம் அகற்றல் சேவைகளுக்காக 2023 ஆம் ஆண்டில் பாதீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 600,000,000 ஆக இருந்த போதிலும் அந்த வருமானத்தை அறவிடுவதற்காக சபை அங்கீகரித்த வரைவு உப விதிக்காக விடயப் பொறுப்பு அமைச்சின் அங்கீகாரம் கிடைக்காமையினால் அந்த வருமானத்தை சேகரிக்க முடியாதிருந்தது. | மேற்படி | மேல் மாகாண கௌரவ ஆளுநரின் ஆலோசனையைப் பெற்று அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டில் ரூபா 362,007,830 ஆன வாகனத் தரிப்பிட வாடகை வருமானம் முன்னை ஆண்டில் ரூபா 250,596,742 ஆன அந்த வருமானத்தை விட 44 சதவீதம் அதிகரித்திருந்த போதிலும் ஆண்டில் ஆரம்பத்தில் ரூபா 525,292,069 ஆன நிலுவைத் தொகையில் ஆண்டின் போது ரூபா 91,313,378 நிலுவை மீதி பதிவளிக்கப்பட்டிருக்கும் போது 2023 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் நிலுவை ரூபா 590,571,051 வரை 12 சதவீதத்தால் அதிகரித்துச் சென்றமைக்கு மோட்டார் வாகன தரிப்பிடம் ஒப்பந்தகாரர்களின் வாடகைப் பணத்தை சேகரித்துக் கொள்ளும் நலிவான நிலைமை தாக்கமளித்திருந்தது. | மேற்படி | கொழும்பு மாநகர சபைக்கா அறவிடப்பட்டுள்ள கட்டணமாக இருந்தமையால் மோட்டார் வாகன தரப்பிடக் கட்டணத்தை தாமதம் இன்றி நகர சபைக்கு பெற்றுக் கொள்வதற்கா நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு நகரத்தில் பொதுவாக மழை நேரங்களின் போது நீரில் தாழ்கின்ற 20 இடங்கள் அளவில் சபையினால் இனங்காணப்பட்டிருந்த போதிலும் மழைநீர் வழிந்தோடி ஒன்று சேர்ந்ததன் காரணமாக ஏற்படுகின்ற வெள்ள நிலைமையை கட்டுப்படுத்திக் கொள்வதற்காக பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் மீளாய்வாண்டின் பௌதீக மற்றும் நிதிசார் செயல் முன்னேற்றத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கும் ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கும் தவறியிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றோம். | இனங்காணப்பட்ட இடங்கள் தொடர்பாக தீர்வினை வழங்குவதை துரிதப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உலக வங்கியின் கடன் உதவியின் மூலம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கொழும்பு நகரம் சார்ந்த நொறிஸ் கால்வாய் அபிவிருத்தியின் மூலம் அதில் சேருகின்ற மழை நீர் விரைவாக பேரே வெவயிற்கு வழிந்தோடச் செய்வதற்காக 632 மீற்றரை உடைய புதிய கால்வாய் ஒன்றை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்ட போதும் மாநகர சபைக்குரிய 36 வீடுகளை உடைய உடைந்த வீட்டுத் தொகுதி ஒன்றின் காரணமாக ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் எஞ்சியிருந்த 105 மீற்றரில் கால்வாயை பூர்த்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் ரூபா 150 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள் துரிதப் படுத்தாமையின் காரணமாக மாநகர சபைக்கு அந்த தொகையைப் பயன்படுத்த முடியாமையினால் மருதானை டீன்ஸ் வீதி மழையினால் வெள்ளத்திற்கு உட்படுவதை தடுக்க முடியாதிருந்தது. | குடியிருப்பாளர்களை அகற்றி காணியை கையேற்கும் நடவடிக்கையின் போது எழுந்த பிணக்குகளைத் தீர்த்து வைக்கப்படுவதுடன் நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் அமுல்படுத்தும் போது நீர்வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு பிரிவில் தாமதமும் காணப்பட்டதுடன் உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செயற்றிட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும். |
| (இ) | இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தால் சில வருடங்களுக்கு முன்னர் சங்கராஜ மாவத்தையில் மழை நீர் வழிந்தோடச் செய்வதற்காக கொங்கிரீட் (24’’) குழாய் 180 மீற்றர் அளவில் பதிக்கப்பட்டிருந்த போதும் இறுதி 10 மீற்றர் அளவான பகுதியைப் பூர்த்தி செய்வதற்கு காரணமான தடைகள் அகற்றப்பட்டிருந்த போதிலும் செயற்றிட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு கொழும்பு மாநகர சபையின் பொறுப்பு வாய்ந்த உத்தியோத்தர்கள் முன்வராமையினால் சிறிய மழையின் போதும் அந்த மாவத்தையில் ஒன்று சேர்கின்ற மழை நீர் வழிந்தோடிச் செல்ல முடியாமையின் காரணமாக அந்த வீதி நீரில் அமிழ்வதை தவிர்க்க முடியாதிருந்தது. | 2024.01.19 ஆம் திகதி பிரச்சினையான நிலைமைகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. | உடனடியாக செயற்றிட்டத்தின் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ)i. | கொழும்பு மாநகர சபையில் அமைந்துள்ள புராதன பெறுமதி உடைய கட்டிடம் ஒன்றான நகர பிதாவின் உத்தியோகபூர்வ இல்லத்திற்காக நிதிப்பிரமாணம் 751(1) இன் பிரகாரம் உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்களுக்காக பொருட் | 2016 ஆம் ஆண்டு முதல் பொருட் பதிவேடு பேணிச் செல்லப்படாது இருந்ததுடன் பொருள் மெய்மையாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. இந்த குறைபாடுகளைச் சரி செய்வதற்கு | பொருட் பதிவேடுகளை நாளது வரையாக்கி பொருள் மெய்மையாய்வு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | நியமிக்கப்பட்ட குழு அந்த குறைபாடுகளைச் சரி செய்கின்றது. | |
| ii. | 2018, 2019, 2020 என்ற ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 560,250 ஆன உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்கள் தொலைந்து போனமை தொடர்பாக நட்டத்திற்குப் பொறுப்பு வாய்ந்த நபரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | பொறுப்பு வாய்ந்த நபரிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iii. | உத்தியோகபூர்வ இல்லத்திற்காக பெறப்பட்டிருந்த 02 நீர் இணைப்புக்களுக்குரிய நிலுவைத் தொகை ரூபா 107,472 மற்றும் நிலையான தொலைபேசி இணைப்புக்கள் 03 மற்றும் உள்ளக இணைப்புக்களுக்கான காலப் பகுதியில் நிலுவைத் தொகை ரூபா 49,289 முன்னாள் நகர பிதாவிடம் இருந்தும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | முன்னாள் நகர பிதா குடியிருந்த காலத்திற்குரிய பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முன்னாள் நகர ஆணையாளரினால் அங்கீகாரம் இன்றி ஓடப்பட்ட ஜீப் வண்டியின் கியர் முறைமை பாதிப்பிற்கு உட்பட்டமை தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்ட கராஜ் இனால் பழுதுபார்த்தல் பூர்த்தி செய்யப்பட்டு 2022 ஆகஸ்ட் 15 ஆம் திகதி ரூபா 930,000 பட்டியல் சமர்ப்பிக்கப்பட்ட பின் காசு செலுத்தி வாகனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் தனியார் கராஜில் வைப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | பணம் செலுத்தி வாகனத்தை விடுவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் முறையான விசாரணையில் நட்டம் ஏற்பட்டிருக்குமாயின் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 முதல் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான கூட்டுமொத்தமான ரூபா 6,031,795,723 ஆன கடன்பட்டோர் பெறுமதியில் நடப்பாண்டில் மொத்தக் கொடுப்பனவுகள் ரூபா 1,402,687,587 அதாவது 23 சதவீதம் ஆகக் காணப்பட்டதுடன் நானாவித கடன்கொடுத்தோர் முகாமைத்துவம் நலிவான நிலையில் காணப்பட்டது. | பதிலளிக்கப்பட வில்லை | கடன் கொடுத்தோரை கணக்கீடு செய்தல் முறையாக கட்டுப்பாட்டு முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் மீள செலுத்த வேண்டிய வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட மிகவும் நீண்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற கூட்டுமொத்தமான ரூபா 17,057,736 ஆன 04 மீதிகள் மற்றும் ரூபா 817,585 வரவு மீதி என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | காலாவதியான வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் வரவு மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (இ) | காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் கீழ் பல வருட காலமாக கொண்டு வரப்படுகின்ற கூட்டுப்பெறுமதி ரூபா 3,934,868 போலியான பண மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | உள்ளபடியாக காணப்படாத சகல காசுகள் தொடர்பாகவும் கண்டறிந்து தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | முற்செலுத்துகைகள் மற்றும் முற்பணப் பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட இனங்காணப்படாத 10 கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 5,426,492 இனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | உள்ள படியாகக் காணப்படாத இனங்காண முடியாத முற்பணக் கணக்கு மீதிகளை தீர்த்து வைத்தல் வேண்டும். |
| (உ) | 2023 டிசம்பர்31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக விநியோகிக்கப்பட்ட 24 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு இடையே 18 ஐயவினாக்களுக்காக பதிலளிக்கப்படா திருந்ததுடன் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதிலளிக்கும் தாமதம் 01 மாதம் முதல் 10 மாதம் வரை காணப்பட்டது. | மேற்படி | குறித்துரைத்த காலப் பகுதியில் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதில் அளிப்பதற்கு உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை வலுப்படுத்துதல் வேண்டும. |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு மாநகர சபையின் நகர அறுவைக் கூடத்தில் ஆடுகள் மாத்திரம் வெட்டப்படுவதுடன் மாட்டிறைச்சி வவுனியா, கொரவபொத்தானை, கலன்பிந்துனுவெவ, கஹடகஸ்திகிலிய , கல்கமுவ, மத்திய நுவரகம்பலாத்த, மிகிந்தலை, கிரிபாவ போன்ற உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங்களில் இருந்து கொழும்பு அறுவைக் கூடம் வரை கொண்டு வரப்பட்டு கொழும்பு நகரத்தில் மாட்டிறைச்சிக் கடைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. அவ்வாறு உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங்களில் இருந்து கொழும்பு மாநகர சபையின் அறுவைக் கூடத்திற்கு மாட்டிறைச்சியை போக்குவரத்துச் செய்து உப விதிகளுக்கு முழுமையாக முரணாகவும் 04 தசாப்த காலத்தில் அவ்வாறு மாட்டிறைச்சி போக்குவரத்துச் செய்யப்பட்ட போதும் அதற்குரிய உபவிதிகளைத் திருத்தி அங்கீகரித்துக் கொள்ளல் மற்றும் தேசிய மட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய சட்ட வழங்கல்களுக்காக உரிய அதிகார தரப்பினரிடம் கோரிக்கையும் விடப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை | உப விதிகளைத் திருத்துதல் மற்றும் தேசிய மட்டத்திலும் மாகாண சபை மட்டத்திலும் மேற்கொள்ள வேண்டிய சட்ட வழங்கல்களுக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மாட்டிறைச்சி பரிசோதனை செய்வதற்கான கட்டணம் இறைச்சி இறாத்தலுக்கு 05 சதம் ஆக இருந்ததுடன் 1959 பெப்ரவரி 27 ஆந் திகதியின் பின்னர் கட்டணம் திருத்தப்படாமையினால் 2022 டிசம்பர் 27 ஆந் திகதிய இலக்கம் 3516 என்ற சபைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட இறைச்சி பரிசோதனைக்கான சேவைக் கட்டணம் மாடு ஒன்றுக்கு ரூபா 1,500 உம், பன்றிக்காக ரூபா 1,500 உம் ஆடு ஒன்றிற்காக ரூபா 600 உம் ஆக பகிரங்கப்படுத்தி அறவிடாமையின் காரணமாக ரூபா 43,126,800 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | மேற்படி | சபைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமைக்கு எதிராகவும் , வருமானத்தை இழந்தமைக்கு எதிராகவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1984 பெப்ரவரி 16 ஆந் திகதி அதி மேதகு ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதமரினால் அறுவைக் கூடங்கள் மற்றும் கலாசார, வணிக நிலையம் ஒன்றாக மீண்டும் ஸ்தாபித்து ''பழைய நகர மண்டப நிலையம்'' ஆக பெயரிடப்பட்டு மற்றும் 2013 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய இலக்கம் 1873/73 என்ற இலங்கை ஜனநாய சோசலிச குடியரசின் மூலம் பழைய மரபுரிமையாக பெயரிடப்பட்ட கொழும்பு 11 புறக்கோட்டையில் பிரதான வீதியில் அமைந்துள்ள பழைய நகர மண்டபக் கட்டடம் மற்றும் புராதன எடின்பெறோ மண்டபம் அதன் நோக்கத்தின் கீழ் வரும் வகையில் மற்றும் கட்டிடத்தின் புராதன மற்றும் மரபுரிமைக்கு பாதிப்பு ஏற்படுகின்ற வகையில் வியாபாரிகளுக்கு பயன்படுத்துவற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | பாதகமான நிலைமையை முறைப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின் றது. | வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பிரயாணிகளின் கவர்ச்சியை ஊக்கிவிப்பதற்கான இடமாக இருந்தமையால் புராதன மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பழைய நகர மண்டபத்தில் வாடகைக்கு விடப்பட்டுள்ள கடைகளின் எண்ணிக்கை 48 ஆக இருந்ததுடன் மாதாந்த வாடகை ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை திருத்த வேண்டி இருந்ததுடன் அதன் பிரகாரம் நகர மதிப்பீட்டாளரால் 2012 ஜனவரி 01 ஆந் திகதி முதல் அறவிட வேண்டியிருந்த வாடகை 2012 ஜூன் 29 ஆம் திகதி மதிப்பீடு செய்து பிரதி பொருளாளர் (வருமானம்) இற்கு அனுப்பப்பட்டிருந்த போதும் கணினி முறைமை யானது வரையாக்கி திருத்தப்பட்ட வாடகை அறவிடப்படாமையினால் 2012 ஜனவரி 01 முதல் 2022 டிசம்பர் 31 வரை ரூபா 27,958,260 தொகை நகர சபை நிதியத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | ரூபா 27,958,260 நட்டம் ஏற்பட்டிருந்ததா என மேலும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்பட்டுள்ள நட்டத்தை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்படல் வேண்டும். |
| (உ) | 2012 ஆம் ஆண்டின் மதிப்பீடு கடை வாடகை குறித்துரைத்த காலத்தின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் விடயப் பொறுப்பு உத்தியோகத்தரால் 2023 மே மாதத்தின் போது அந்த மதிப்பீட்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக 2017, 2022 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ள வேண்டிய புதிய மதிப்பீடும் காலம் தாழ்த்தப்பட்டு கடந்த கால வாடகை அறவிடப்பட்டமையால் 2023 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய நியாயமான வாடகையும் இழக்கப்பட்டிருந்தது. | நட்டம் ஏற்பட்டிருந்ததா என மேலும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கவனம் இன்மை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2022 ஆம் ஆண்டுக்குரிய பொதுச் சந்தையின் வாடகைத் திருத்தத்திற்கான மதிப்பீடு 2023 ஜனவரி 30 ஆந் திகதி பெறப்பட்ட போதும் வாடகை திருத்த வேண்டிய திகதியை விஞ்சி ஒரு வருடம் கடந்திருந்த போதிலும் புதிய வாடகையின் பிரகாரம் வாடகை அறவிடப்படாமையினால் கணனி முறைமையை நாளதுவரையாக்காமையின் காரணமாக ரூபா 7,862,400 சபை நிதியத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | புதிலளிக்கப்படவில்லை. | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்தது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | மேல் மாகாண ஆளுநரின் செயலாளரால் பிரத செயலாளருக்கு முகவரி இடப்பட்ட 2020 ஜூலை 08 ஆம் திகதிய இலக்கம் GOS/LES/2020 என்ற கடிதம் மூலம் அனுப்பப்பட்டு ஆளுநரின் நியதிகளின் பிரகாரம் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 டிசம்பர் 03 ஆந் திகதிய LGD/13/2016(1) என்ற சுற்றறிக்கையின் படி உடன்படிக்கை எடுக்கப்பட்ட திகதியில் இருந்து ஒவ்வொரு 03 வருடங்களுக்கும் ஒரு தடவை சந்தைக் கடைகளின் வாடகை அரசாங்கத்தின் மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் திருத்தப்படல் வேண்டும். எனினும் கொழும்பு மாநகர சபைக்குரிய சந்தைக் கடைகளில் வாடகை 05 வருடங்களுக்கு அவ்வப்போது திருத்த வேண்டிய போதிலும் ஒரே தடவையில் அதிகரித்து கடைகளின் அளவில் வாடகை | மேற்படி | ஆளுநரின் பணிப்புரைகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை ஆலோசனை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியிருந்ததுடன் குறித்துரைத்த கால எல்லையில் வாடகை திருத்தி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறுதித் தடவையாக 2017 ஆம் ஆண்டின் போதே திருத்தப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | 2017 ஆம் ஆண்டின் போது பொதுச் சந்தை வாடகையை திருத்துவதற்குரிய நிதிக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நகர மதிப்பீட்டாளரால் பொரல்லை பொதுச் சந்தையில் கடைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட வாடகை கணிசமான வீச்சில் மாற்றம் ஏற்பட்டிருந்ததுடன் சில கடைகளில் வாடகை 33 சதவீத அளவினால் குறைவடைந்தமையும் அந்த சந்தையில் வேறு சில கடைகளின் வாடகை 824 சதவீதத்தால் உயர்வடைந்து சென்றதன் அடிப்படையில் கணக்காய்வின் போது தெளிவு படுத்தப்படவில்லை. அதன் பிரகாரம் பக்கச்சார்பு இன்றி நியாயமான வாடகை மதிப்பீடு ஒன்று நகர மதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்படாதிருந்தமையும் நகர மதிப்பீட்டாளரின் கடை வாடகைக்கு எதிராக வியாபார சமூகம் அவ்வப்போது விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் திருத்தப்பட்ட வாடகையில் 20 சதவீதத்தைக் குறைப்பதற்கு விசேட ஆணையாளர் தீர்மானித்திருந்தார். அதன் பிரகாரம் 10 வருடங்கள் மற்றும் 17 வருட காலவீச்சின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட வாடகை அதிகரிப்பின் பின்னர் 26 கடைகளின் வாடகை 2016 ஆம் ஆண்டின் வாடகையை விட குறைவடைந்தமை தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | மேற்படி | நியாயமான வாடகை மதிப்பீடு ஒன்றை செய்ய வேண்டி இருந்ததுடன் மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை தொடர்பாக எதிர்ப்பு கணக்கிடும் போது மீண்டும் மதிப்பீடு செய்வதற்கும் சட்டத்திற்கு முரணாக நடவடிக்கை எடுக்காதிருப்பதற்கும் கண்காணித்தல் வேண்டும். |
| (ஐ) | கிருளப்பனை சந்தையில் நாளாந்த வியாபாரம் செய்கின்ற வியாபாரிகளிடம் இருந்து நாளென்றுக்கு ரூபா 50 வாடகைத் தொகை அறவிட்டு 68 கூறுக் கடைகள் பொது ஆலோசனைக் கோவையின் கீழ் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த ஆலோசனை மற்றும் நிபந்தனை இலக்கம் 05 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட உணவு வகை வியாபாரங்கள் தடை செய்யப்பட்டிருக்கும் போது இலக்கம் 29A இடத்தில் அலுமினியம் மற்றும் கண்ணாடி அமைத்து நிரந்தரக் கடை ஒன்று தயாரிக்கப்பட்டு சிற்றுண்டிச் சாலை நடாத்திச் செல்லப்பட்டமையும் ரூபா 55 வாடகை மாத்திரம் செலுத்தி பொது மின்சாரம் பொது நீர் வசதிகள் பயன்படுத்தி குளிரூட்டிகள், மின்சார விசிறிகள், நெஸ்கபே இயந்திரம், மின்சாரக் கேத்தல் மற்றும் வானொலி இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் வியாபார நிலையத்தின் உரித்தைக் கையேற்பதற்கும் மற்றும் மின்சாரம், நீர் பாவனைக்குரிய கட்டணங்களை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | மேற்படி | வியாபார நிலையத்தின் உரித்தைக் கையேற்பதற்க் மற்றும் மின்சாரம், நீர் பயன்பாட்டுக்குரிய கட்டணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | பொரளை பொதுச் சந்தையில் தரை மாடியில் வாகன தரிப்பிடத்துடன் 369 கடைகளை உடைய நான்கு மாடிகள் உடைய கட்டிடத்தில் 171 கடைகள் வாடகைக்கு வழங்கப்படாமல் மூடி | மேற்படி | பொதுச் சந்தையில் இயலுமான வரை பழுது |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட்டதன் காரணமாக நகர சபையின் வருமானம் இழக்கப்பட்டிருக்கும் போது 2022 ஜனவரி 19 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் வியாபாரி ஒருவரினால் இலக்கம் 7/2/2G, 7/2/2H , 7/2/25, 7/2/2M என்ற கடைகளுக்காக ரூபா 2,071,000 கேள்வித் தொகை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2023 ஏப்ரல் 30 ஆந் திகதி பொதுச் சபையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற பின்னர் ரூபா 3,002,392 தொகை அறவிடப்பட்டிருந்த போதிலும் 2024 மே 30 ஆந் திகதி வரையிலும் கடைகளை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | பார்த்தல்களை மேற்கொண்டு கேள்வி மூலம் மூடிப்பட்டுள்ள கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | 1987 இன் 38 ஆம் இலக்க சனசமூக மண்டபங்களுக்கு உரிய அனுமதிப் பத்திரங்களை வழங்கும் சட்டத்தின் 7 ஆம் பிரிவில் திருத்தப்பட்ட பிரதான உறுப்புரையின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் சமூக மண்டபங்களினால் அது நடவடிக்கைகள் பேணிச் செல்லப்படுகின்ற அல்லது நடாத்திச் செல்லுவதற்கு விடுவிக்கப்படுகின்ற நிலையம் ஒன்றில் காணப்பட வேண்டிய 11 விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த விடயங்களுடன் இணங்குவதாயின் மாத்திரம் அனுமதிப் பத்திரம் விநியோகிப்பதற்காக அனுமதி வழங்க வேண்டி இருந்ததுடன் அந்த சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் பிரகாரம் சட்டம் அமுல் படுகின்ற திகதியின் பின்னர் ஸ்தாபிக்கப்பட்ட எந்த ஒரு சமூக மண்டபங்களும் சங்கத்தின் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்குமாயின் மாத்திரம் அல்லது பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருக்குமாயின் மாத்திரம் சமூக மண்டபங்களாக அனுமதிப் பத்திரம் வழங்குதல் அல்லது புதுப்பித்தல் முடியாது எனினும் இந்த விடயங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் 25 சனசமூக மண்டபங்களுக்காக அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | மேற்படி | சனசமூக மண்டபங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குதல் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும. |
| (ஔ) | கொழும்பு மாநகர சபைக்குரிய ஆர்.ஏ. த மெல் மாவத்தையில் அமைந்துள்ள 02 றூட் 39 பேர்ச் காணி சமய நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்காக வாடகை உடன்படிக்கையின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட வாடகைப் பெறுமதி அறவிடப்படாமல் வருடம் ஒன்றிற்கு ரூபா 1,200 வீதம் ஆன வாடகையின் கீழ் 1983 செப்டம்பர் 14 ஆம் திகதி முதல் 99 வருடங்களுக்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த வாடகை உடன்படிக்கையில் 02 நிபந்தனை மீறும் வகையில் அந்த உரிமையாளரால் காணியின் ஒரு பகுதி உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இலக்கம் 3772 என்ற இரத்துச் செய்தல் உடன்படிக்கையின் மூலம் நகர சபைக்கு மீண்டும் கையேற்கப்பட்ட இலக்கம் 11-2009 என்ற நில | பதிலளிக்கப்பட வில்லை | காணி மற்றும் கட்டிடங்களின் உரித்தை நகர சபையில் கையளிக்கப்பட்டு ள்ளமையால் உடனடியாக உரிமை பெற்று மீண்டும் வாடகைக்கு வழங்குவதற்கோ அல்லது நகர சபையின் பணிகளுக்காக பயன்படுத்தவோ வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் 1, 2, 3 பகுதிகளில் அமைந்துள்ள கட்டிடங்கள் நகர சபையின் கீழ் கொண்டுவரப்படாமல் நகர சபை ஆதனங்களை மேலும் முறையற்ற வகையில் பயன்படுத்துவற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு மோசடியாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு உதவி காண்பிக்கும் விடயங்களில் அநேகமானவை கட்டிடத் திட்டங்களை அங்கீகரித்தல், ஆதன வரி இலக்கம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருந்ததுடன் தற்போது வரையும் உத்தியோகத்தர்களின் உதவியுடன் நகர சபைக்குரிய ஆதனங்கள் முறையற்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் வாடகைப் பணம் கொழும்பு மாநகர சபைக்குச் செலுத்துவதற்கு ஜனாதிபதி அலுவலகம் இணக்கம் தெரிவித்திருக்கும் போது அந்தத் தொகையை நகர சபைக்கு பெற்றுக் கொள்வதற்கும் மிகுதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | ஜனாதிபதி செயலகத்தில் இருந்து செலுத்துவதற்கு இணங்கம் தெரிவிக்கப்பட்ட பணத்தை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (f)(i) | பழைய யோனி வீதியில் இலக்கம் 319 மற்றும் 323 என்ற 38.32 பேர்ச் பரப்பளவான காணி தனிநபருக்கு வாடகை உடன்படிக்கையின் மூலம் 1983 டிசம்பர் 09 ஆந் திகதி முதல் 99 வருட நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கும் போது இலக்கம் 964 என்ற உடன்படிக்கையின் மூலம் வாடகை உரித்து 1983 டிசம்பர் 09 ஆந் திகதி முதல் 99 வருட காலப்பகுதிக்கு வியாபார நிலையம் ஒன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. வாடகையாளர் செலுத்த வேண்டிய நில வாடகை செலுத்தப்படாது இருந்தமையால் அந்த வாடகை அறவிடும் நோக்கில் அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்காக பிணக்குகள் தீர்க்கும் செயற்பாடுகளும் நீதிமன்ற செயற்பாடுகளும் பின்பற்றப்பட்டிருந்ததுடன் 2007 நவம்பர் 21 ஆந் திகதிய நீதிமன்றத்தின் பிரகாரம் ரீட் கட்டளை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மிகுதி 10 வருட காலத்தில் நிலுவைப் பணம் செலுத்தும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த இலக்கம் HCARB1571/2003 என்ற வழக்கு முடிவடைந்திருந்த போதிலும் 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்தி பூர்த்தி செய்யப்பட வேண்டிய ரூபா 20,823,102 மொத்த நிலுவை பணமும் 2024 ஜுன் 30 ஆம் திகதி வரையிலும் செலுத்தாதிருந்த வாடகையாளருக்கு எதிராக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | வியாபார நிலையத்தைக் கையேற்று நிலுவை வாடகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மேலும் வாடகையாளருக்கு இந்த காணி வழகப்படுகின்ற சந்தர்ப்பத்தில் காணப்பட்ட விழா மண்டபத்திற்காக அந்த அளவில் விழா மண்டபம் நான்காவது மாடியில் நிர்மாணித்து தருவதாக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த நிபந்தனை கவனத்தில் கொள்ளாமல் கட்டிடத் திட்டம் அங்கீகரித்ததன் மூலம் நகர சபை ஆதனங்கள் முறையற்ற வகையில் பயன்படுத்துவற்கு நகர சபை உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக இடமளித்திருந்தனர். | மேற்படி | நகர மக்களின் உரிமைகள் தொடர்பில் பாதகமாக உள்ள இந்த வியாபார நிலையத்தை மீண்டும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா)(i) | கொழும்பு 08 எல்விட்டிகல மாவத்தையில் இலக்கம் 02 பீ இடத்தில் 20 பேர்ச் அளவான காணி மரண சடங்கு மண்டபத்தை பேணிச் செல்வதற்காக 1987 ஆகஸ்ட் 10 ஆந் திகதியில் வழங்கப்பட்ட 30 வருட வாடகைக் காலம் 2017 இல் முடிவடைந்த பின்னர் 02 வருடங்களுக்கு அந்த வாடகையாளருக்கே வாடகை அடிப்படையில் ரூபா 725,000 மாதாந்த வாடகை வழங்கப்பட்டிருந்தது. அதன் காலமும் 2019 ஆகஸ்ட் 11 ஆந் திகதி முடிவடைந்திருந்ததுடன் 2024 மே 30 வரையும் உடன்படிக்கை இன்றி வாடகை செலுத்தி ஆதனத்தை பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை | உடன்படிக்கை செய்யப்பட்ட கால எல்லை முடிவடைந்த உடன் ஆதனங்களை மதிப்பீடு செய்து வாடகை அடிப்படையில் அல்லது குத்தகை அடிப்படையில் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் LGD/13/2016(1) மற்றும் 2020 டிசம்பர் 03 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மாநகர சபைக்குரிய கட்டிடம் ஒன்று அல்லது காணி ஒன்றை வாடகைக்கு வழங்குகின்ற சந்தர்ப்பத்தின் போது அதற்குரிய ஆதனங்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 35 மற்றும் 37 ஆம் பிரிவுகளின் கீழ் எடுக்கப்பட வேண்டிய ஆதனங்காளாக இருக்கும் போது அதற்காக மேல் மாகாண உள்ளூராட்சி விடய பொறுப்பு கௌரவ அமைச்சரின் / மேல் மாகாண கௌரவ ஆளுநரின் முன் அங்கீகாரத்துடன் அதி மேதகு ஜனாதிபதியின் முன் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். எனினும் மேற்கூறப்பட்ட ஆதனம் நீண்ட கால வாடகை அடிப்படையின் கீழ் 30 வருட கால எல்லையின் பின்னர் வாடகைக்கு வழங்குவதற்காக உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்க ள் கண்காணித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2019 ஆகஸ்ட் 11 ஆந் திகதி வாடகை உடன்படிக்கைக் காலம் முடிவடைந்த உடன் மீண்டும் வாடகை மதிப்பீடு ஒன்று மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2021 மார்ச் 17 வரை தாமதிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ரூபா 9,286,250 (வட் உடன்) நிலுவை ஒன்று ஏற்பட்டு இருந்ததுடன் அந்த நிலுவைத் தொகை 2024 ஜுன் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தவறியிருந்தார். | மேற்படி | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் கண்காணித்தல் வேண்டும். |
| (கி) | கொழும்பு 05 ரொபர்ட் குணவர்தன மாவத்தையில் இலக்கம் 9/1 இடத்தில் மாநகர சபைக்குச் சொந்தமான 14.76 பேர்ச் அளவான காணி ஒன்று தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 30 வருட வாடகைக் காலம் 2017 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த பின்னர் 2018 பெப்ரவரி 27 ஆந் திகதி ஆணையாளரால் மீண்டும் ரூபா 2,000 மாதாந்த வாடகையின் அடிப்படையில் 10 வருடங்களுக்கு அந்த வாடகையாளரக்கு மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40(1)(ஊ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்னர் மீண்டும் இந்த ஆதனம் மாதாந்த வாடகை ரூபா 16,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் வாடகையாளரால் அந்த வாடகை செலுத்தப்படாதிருந்ததுடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்ளாமையினால் 2018 ஜனவரி 01 ஆந் திகதி முதல் 2023 டிசம்பர் 31 வரை கூட்டுமொத்தமாக ரூபா 1,008,000 நட்டம் சபைக்கு ஏற்பட்டிருந்தது. | மேற்படி | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் மதிப்பீட்டு வாடகை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வாடகை அறவிடுதலைப் புறக்கணித்தல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கீ) | சேர் மார்கஸ் பிரனாந்து மாவத்தை இலக்கம் 45 என்ற கொழும்பு மாநகர சபைக்குரிய 04 ஏக்கர் 03 றூட் 31 பேர்ச் அளவான பிரபல விளையாட்டு சங்கம் ஒன்று அமைந்துள்ள காணியின் 30 வருடகால வாடகைக் காலம் 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. வாடகைக் காலம் முடிவடைந்த பின்னர் சகல கட்டிடங்களுடனும் தீர்த்து வைத்தல் உரித்து மாநகர சபைக்கு கையளிக்க வேண்டியிருந்த போதிலும் அந்த சங்கத்தின் கோரிக்கையின் அடிப்படையில் வாடகைக் காலத்தை நீடித்தல், சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் திருத்தப்பட்ட வாடகை செலுத்துதல் மற்றும் உடன்படிக்கை செய்தல் புறக்கணிக்கப்பட்டிருந்தது. நிலுவை வாடகையை அறவிடல், மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை வாடகை திருத்துதல் என்ற நிபந்தனையின் | பதிலளிக்கப்படவில்லை | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீண்டும் வாடகைக்கு வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் வாடகையாளர் அனுமதியின்றி இருக்கின்றமை தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| அடிப்படையில் அந்த சங்கம் உடன்படிக்கைக்கு இணங்காதிருக்குமாயின் ஆதனத்தை கையேற்பதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளின் தேவை ஒன்று காணப்பட்ட போதிலும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் அதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | எடுத்தல் வேண்டும். |
| (கு) கொழும்பு 13 ஜம்பட்டா வீதி PPA 3233 மற்றும் Lot இலக்கம் 02 என்ற மாநகர சபைக்குச் சொந்தமான 14.20 பேர்ச் அளவான காணி வாகன நிறுத்தி வைக்கும் இடம் ஒன்றாக மாத்திரம் பயன்படுத்துவதற்கு பெண்களுக்கு ரூபா 5,000 மாதாந்த வாடகையில் 1986 பெப்ரவரி 26 ஆந் திகதி வாடகை உடன்படிக்கை ஒன்றில் வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் 04 ஆம் நிபந்தனை மீறும் வகையில் வாடகையாளரால் கட்டிடம் ஒன்று நிர்மானித்தல் தொடர்பாக அந்த ஆதனத்தை முத்திரையிட்டு 2023 டிசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கையேற்கப்படாதிருந்ததுடன் 1992 ஆம் ஆண்டு முதல் 2023 டிசம்பர் 31 ஆந் திகதி வரை அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 918,540 ஆகவும் காணப்பட்டது. | மேற்படி | நிலப்பகுதிகளை உடனடியாக கையேற்கு முறையான பிரகாரம் கேள்வியின் மூலம் வாடகைக்கு வழங்குதல் வேண்டும். கடமைகளைப் புறக்கணிக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கூ) கொழும்பு 12 ஶ்ரீ சுமனதிஸ்ஸ மாவத்தையில் ஆதனவரி இலக்கம் 136 என்ற 15.68 பேர்ச் அளவான கொழும்பு மாநகர சபைக்குரிய காணி ஒன்று மர வியாபாரத்தை நடாத்திச் செல்வதற்காக முறையற்ற வகையில் ரூபா 30 மாதாந்த வாடகையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 1980 டிசம்பர் 11 ஆந் திகதி தேசிய பத்திரிகைகளில் அறிவித்தல் பிரசுரித்து இந்தக் காணி 99 வருடத்திற்கு வாடகைக்கு வழங்குவதற்காக கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் முன்னர் ரூபா 3,250,000 கேள்வி ஒன்றில் தனியார் கம்பனி ஒன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட அந்தக் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் இது வரை அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றி காணியை வாடகைக்கு வழங்குவதற்கோ அல்லது நியாயமான வாடகை ஒன்றை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேற்படி | 1980 ஆம் ஆண்டு முதல் அனுமதி அற்ற வகையில் குடியிருந்து வருகின்ற நபர்களிடமிருந்து காணியின் உரித்தைப் பெற்று கேள்வி கோரல் மூலம் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கெ) | கொழும்பு 05 பூங்கா வீதியில் ஹைலெவல் வீதிக்கு அடுத்தால் அமைந்துள்ள கொழும்பு மாநகர சபைக்குரிய 05 ஏக்கர் 02 றூர் 17 பேர்ச் அளவான காணி ஒன்றில் விளையாட்டு சங்கம் ஒன்றுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2020 டிசம்பர் 31 ஆந் திகதி உரிய வாடகைக் காலம் முடிவடைந்திருந்தது. மீண்டும் நீண்ட கால ரீதியில் அந்த விளையாட்டு சங்கத்திற்கு வாடகைக்கு வழங்குவதற்கு அதிமேதகு ஜனாதிபதியின் அங்கீகாரம் பெறப்பட்டு 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும் வாடகையாளர் ரூபா 413,000 ஆன புதிய மாதாந்த மதிப்பீட்டு வாடகையை செலுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்காமல் பழைய வாடகைத் தொகையே அறவிடப்பட்டிருந்தது. | மேற்படி | வாடகையாளருடன உடன்படிக்கை செய்வதற்கும் நிலுவை வாடகை அறவிடுவதற்கும் மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை வாடகையை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அனுமதியற்ற வகையில் பயன்படுத்துவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கே) | 2013 ஆம் ஆண்டுக்கு முன்னர் நகர அபிவிருத்தி அதிகார சபையின் முதலீடு ஒன்றாக ரூபா 900 மில்லியன் செலவினம் ஒன்றைச் செய்து நிர்மாணிக்கப்பட்ட கொழும்பு மாநகர சபைக்கு கையளிக்கப்பட்ட 40 சலவை அறைகளை உடைய நவம் மாவத்தை சலவை அறைகள் கொழும்பு மாநகர சபையினால் உப விதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடாத்திச் செல்லப்படாதிருந்ததுடன் அதற்கு முரணாக கிழிந்த துணிகள் அறை மற்றும் ஆடைகள் தைக்கும் 14 அறைகள் குடியிருப்புக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் இலக்கம் 1029 சபைத் தீர்மானத்தின் பிரகாரம் சலவைக்காரர்களிடமிருந்து ரூபா 50,000 வைப்பு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் ரூபா 5,000 மாதாந்த வாடகை ஒன்றை அறவிடுவதற்கும் உடன்படிக்கை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் விசேட ஆணையாளரின் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 3,000 வரை வாடகைப் பணம் குறைக்கப்பட்டிருந்தது. 40 சலவை அறைகளில் 14 இலும் முழுமையாக குடியிருப்பதற்காக பயன்படுத்தப்படுவதுடன் சலவைத் தொழிலில் ஈடுபடாத நபர்களும் இந்த சலவை அறைகளில் குடியிருந்து வருவதுடன் உபவிதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் சலவைத்தொழிலை நடாத்திச் செல்வதற்கு பொது சுகாதார பரிசோதகர் திணைக்களமும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை | அரசாங்கத்தின் முதலீடை முறையற்ற வகையில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக உப விதியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (கை) சலவைத் தொழிலில் ஈடுபடுகின்ற நபர்களுக்கு வழங்குவதற்காக ரூபா 200 மில்லியன் செலவில் 2012 ஆம் ஆண்டில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு 2016 வரையில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட 64 வீட்டு அலகுகளை உடைய வீடமைப்பு தொகுதியில் வீட்டு நலனாளிகளுக்கு கையளிக்கப்படாமையின் காரணமாக வீடமைப்புத் தொகுதியின் யன்னல், கதவு, குளியலறை பொருத்திகள், தண்ணீர் பம்பிகள், மின் இணைப்புக்கள் கள்வர்களால் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன் வீட்டு நலனாளிகள் அல்லாத குடும்பங்கள் அனுமதி அற்ற வகையில் குடியிருந்து வருகின்றனர். | மேற்படி | அனுமதி அற்ற குடியிருப்பாளர் களை அகற்றி குறித்துரைத்த நபர்களுக்கு வீடுகளை வழங்க வேண்டி இருந்ததுடன் ஏற்பட்டுள்ள நட்டத்தை மதிப்பீடு செய்து பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கொ) நகர திட்டமிடல் பிரிவின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுடன் மருதானை மற்றும் வெள்ளவத்தைப் பிரதேசங்களில் 16 பிரதேசங்களில் கட்டிடங்களை நிர்மாணித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது 05 இடங்களில் அங்கீகரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றியும் 02 இடங்களில் அங்கீகரிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்திற்கு முரணாகவும் 02 இடங்களில் அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்காமலும் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நகர திட்டமிடல் பிரிவின் உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தியிருக்கவில்லை. 07 நிர்மாண இடங்களுக்குரிய நகர அபிவிருத்தி அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் பிரதிகள் மாநகர சபையிடம் காணப்படவில்லை. | மேற்படி | அனுமதியற்ற வகையில் மேற்கொள்கின்ற நிர்மாணங்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கொழும்பு 07, பேராசிரியர் சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கர மாவத்தையில் இலக்கம் 15 என்ற இடத்தில் புதிய கட்டிடம் ஒன்றுக்காக மலசல கூட இணைப்பை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புப் பிரிவின் பணிப்பாளரால் 2020 ஒக்டோபர் 05 ஆம் திகதி ரூபா 90 மில்லியன் மதிப்பீடு ஒன்று உரிய தியார் கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த கம்பனியால் நகர முதல்வருக்கு 2021 ஜனவரி 11 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட | பதிலளிக்கப்பட வில்லை | கொழும்பு மாநகர சபையின் மழை நீர் முறைமை மற்றும் கழிவு நீர் முறைமையின் இணைப்பை வழங்கும் போது இணைப்பின் தன்மையின் பிரகாரம் ஒப்பந்தத் தொகை தீர்மானிக்கப்படுகின்றமைய ால் வெளிப்படையாக இருக்க வேண்டிய திட்ட முறைமை ஒன்றை அமுல்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடிதம் ஒன்று நகர முதல்வரால் நேரடியாக நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புப் பிரிவின் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் ரூபா 90 மில்லியன் மதிப்பீட்டுக்குப் பதிலாக ரூபா 3.08 மில்லியன் புதிய மதிப்பீடு ஒன்று அங்கீகரித்து அதன் பிரகாரம் உரிய மழை நீர் இணைப்பு வழங்கப்பட்டிருந்தது. தொகையில் ரூபா 90 மில்லியன் ஆன மதிப்பீடு ரூபா 3.08 மில்லியன் வரை குறைப்பதற்கான காரண விடயம் ஆக உரிய இடத்தில் இருந்து நெரிஸ்க் வாய்கால் வரை தனிப்பட்ட குழாய் வீதியை அமைப்பதன் மூலம் கருத்து தெரிவிக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்ட போதும் நகர சபைக்குரிய அவ்வாறான முன்மொழிவு ஒன்று அல்லது திட்டம் ஒன்று காணப்பட்டமையும் லிப்டன் சுற்று வட்டம் பிரதேசத்தில் வெள்ள நீர் அச்சுறுத்தல் காணப்படுகின்ற பிரதேசம் அல்லாதிருந்தமையும் ரூபா 90 மில்லியன் மதிப்பீடு ஒன்று வழங்குதல் சர்ச்சைக்குரிய விடயம் ஒன்றாக இருந்தது. | | |
| (ஆ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் மூலம் அல்லது உப கட்டளைச் சட்டங்களின் மூலம் சட்ட ரீதியான ஏற்பாடுகளை வழங்காதிருந்த விடயம் ஒன்றான நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக பொருளாதார வசதியீனத்திற்கு உட்பட்ட மக்களுக்கு சலுகை வழங்குகின்ற விடயத்திற்காக ரூபா 459,620,000 தொகையில் ரூபா 3,500 வீதம் ஆன அன்பளிப்புக்கள் 134,000 எண்ணிக்கையில் லக் சத்தொசவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு எந்த ஒரு நியதிகளும் இன்றி ஒவ்வொரு நகர உறுப்பினர்களினதும் விருப்பத்தின் பிரகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த செலவினம் மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 188(1) ஆம் பிரிவின் கீழ் இடமளிக்கப்படாதிருந்த செலவினம் ஆகும். | பதிலளிக்கப்படவில்லை | மாநகர சபைக் கட்டளைச் சட்டம் 188 ஆம் பிரிவின் கீழ் இடமளிக்கப்பட்டுள்ள செலவினங்களுக்காக மாத்திரம் சபை நிதியம் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட சேர் ஜேம்ஸ் பீரீஸ் மாவத்தையில் அமைந்துள்ள ஆதன வரி இலக்கம் 71 ½ , 71 1/3, 73 என்ற ஆதவரி இலக்கம் கொழும்பு மாநகர சபைக்குரிய 01 றூட் 0.1 பேர்ச் அளவினை உடைய காணியில் 30 வருட வாடகைக் காலம் பொதுச் சபையின் | மேற்படி | மதிப்பீட்டு நில வாடகை வாடகையாளரிடமிருந்து அறவிடப்படாதிருக்குமாயின் மாநகர சபை நிதியத்துக்கு ஏற்படுகின்ற நட்டத்தை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரத்தின் பிரகாரம் 1992 ஒக்டோபர் 22 ஆம் திகதி முதல் 50 வருடம் வரை நீடிக்கப்பட்ட பின்னர் 2004 நவம்பர் 30 ஆந் திகதி இலக்கம் 3411 என்ற புதிய வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் 2 மற்றும் 3 நிபந்தனைகளின் பிரகாரம் நகர மதிப்பீட்டாளரால் வருடம் ஒன்றுக்கு நில வாடகை ரூபா 5 மில்லியன் மற்றும் மாதாந்த பெயரளவில் வாடகை ரூபா 18,000 ஆக 2022 டிசம்பர் 22 ஆந் திகதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. வாடகையினைத் திருத்துவதற்காக முன்மொழிவு நிதிக்குழு 2023 பெப்ரவரி 17 ஆந் திகதி மற்றும் பொதுச் சபை 2023 மார்ச் 03 ஆந் திகதி அங்கீகரித்திருந்த போதிலும் மதிப்பீட்டு அறிக்கையின் படி எதிர்வரும் 20 வருடங்களுக்காக ஒரே தடவையில் அறவிட வேண்டிய நில வாடகையான ரூபா 100 மில்லியனுக்குப் பதிலாக ரூபா 5 மில்லியன் நில வாடகை அறவிடுவதற்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டதன் மூலம் மற்றும் அந்த 05 மில்லியனையும் அறவிடாமையின் மூலம் மாநகர சபை நிதியத்துக்கு ரூபா 100 மில்லியன் இழக்கப்பட்டிருந்தது. | | இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஆர்நோல்ட் ரத்னாயக்க மாவத்தை மாடி வீட்டுத் தொகுதியின் குடியிருப்பாளர்களுக்காக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து 65 வீடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த வீடுகளில் 14 வீடுகள் நகர பிதாவின் அலுவலகத்திலும் மற்றும் நகர செயலாளர் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களுக்கும் முறையற்ற விதத்தில் வழங்கப்பட்டிருந்தது. | சட்ட ரீதியான குடியிருப்புக்கு பொருத்தம் அல்லாத முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய பிரிவு பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் தற்காலிகமாக குடியிருப்புக்காக ஊழியர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. | நகர ஆதனங்களை முறையற்ற வகையில் பயன்படுத்துவதை தடுத்து ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகள் உத்தியோகபூர்வ இல்லமாகக் கருதி உடன்படிக்கை செய்து வாடகை அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மெகசின் வீதி இலக்கம் 20 இல் அமைந்துள்ள 17.7 பேர்ச் பரப்பளவை உடைய காணி ''மெகசீன் பௌத்த நூலக சங்கம்'' என்ற பெயருடைய சங்கத்திற்கு 1983 செப்டெம்பர் 13 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் இலக்கம் 90 என்ற உடன்படிக்கை மூலம் கேள்வி நடைமுறைகள் இன்றி மாதம் ஒன்றிற்கு ரூபா 150 வீதம் வாடகைக்கு ஒரு வருடத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. அந்த வாடகை உடன்படிக்கை மீண்டும் புதுப்பிக்கப்படாது இருந்ததுடன் அவ்வாறு பதிவு செய்யப்பட்ட சங்கமும் காணப்படாது இருக்கும் போது அந்த சங்கத்தின் பேரில் வாடகை உரித்தைத் திருத்தித் தருமாறு அந்த சங்கத்தின் தலைவராக செயற்பட்ட நபரினால் 2020 மார்ச் 12 ஆம் திகதி கோரிக்கை விடப்பட்டிருந்ததுடன் 2014 நவம்பர் 23 ஆந் திகதி வழங்கப்பட்ட சான்றிதழின் பிரகாரம் நகர சபை பாதுகாவலர் குடியிருக்கின்றதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நகர சபை சேவையில் ஈடுபட்டிருக்கின்ற , நகர சபை ஆதனத்தில் அனுமதி அற்ற வகையில் குடியிருக்கின்ற மற்றும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமையும் நகர சபை அதிகார தரப்பினரால் அந்த நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்பட வில்லை | உடனடியாக காணியின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் கேள்வி முறைமையைப் பயன்படுத்தி காணி மற்றும் கட்டிடங்களை வாடகைக் வழங்குவதற்கு அல்லது குத்தகைக்கு வழங்க வேண்டி இருந்ததுடன் நகர சபை ஊழியர்களுக்கு எதிராக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | கொழும்பு 14, மகுமாரகே மாவத்தையில் இலக்கம் 03 என்ற இடத்தில் 6.80 பேர்ச் அளவான காணி ஒன்று 2020 ஜனவரி 14 ஆந் திகதி 30 வருடத்திற்கு நபர் ஒருவருக்கு ரூபா 60,000 வாடகையில் வழங்கப்பட்டிருந்தது. 2020 ஜனவரி 14 ஆந் திகதி வாடகைக் காலம் முடிவடைந்த பின்னர் ஆதனத்தை மீண்டும் கையேற்காமல் ரூபா 83,000 மாதாந்த வாடகையில் 03 வருட காலத்திற்காக வாடகைக்கு வழங்கப்பட்டு அந்த காலமும் முடிவடைந்திருந்ததுடன் கணக்காளர் வருமானத்தின் கோரிக்கையின் பிரகாரம் நகர மதிப்பீட்டாளரால் இந்த ஆதனத்தின் வாடகை ரூபா 138,060 ஆக மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு அந்த நபருக்கே மீண்டும் 20 வருடங்களுக்காக வாடகைக்கு வழங்குவதற்கு அதி | மேற்படி | முறையற்ற வகையில் வாடகைக்கு வழங்குவதை உடனடியாக நிறுத்தி முறையான பிரகாரம் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மேதகு ஜனாதிபதி அங்கீகாரம் இன்றி தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபையின் பங்கு பற்றல் இன்றி நாகலகம் வீதி பொது சந்தையின் முன் பக்கத்தில் அமைந்துள்ள நகர சபைக்கு உரிய 03 றூட் 2.12 பேர்ச் அளவான காணி வெளித்தரப்பினருக்காக தனியார் குழு ஒன்றினால் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்காக கட்டணம் அறவிடுவதற்கு பற்றுச்சீட்டுக்கள் விநியோகித்து வருமானத்தை உழைத்தமை தொடர்பாக மாநகர சபை எந்த ஒரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை | மாநகர சபைக்கு வருமானத்தைப் பெறும் வகையில் முறையான பிரகாரம் சட்ட ரீதியாக காணியினை வாடகைகக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கொழும்பு மாநகர சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 8700 ஆக இருந்ததுடன் 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான பதவியணியினர் 5317 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 3518 ஆகும். அவ்வாறே நிறைவேற்றுத் தரங்களில் 29 பேரும், இரண்டாம் நிலைத் தரத்தில் 106 பேர்களையும் உள்ளடக்கிய மிகை ஊழியர்களின் எண்ணிக்கையும் காணப்பட்டது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| i. மாநகர சபையின் சேவையின் தேவை தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு ஊழியர் மீளாய்வு ஒன்றின் மூலம் பதவியணியினரைத் திருத்த வேண்டிய போதிலும் நீண்ட காலமாக இவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | மாநகர சபையின் ஊழியர் தேவையினை ஆய்வு செய்து ஊழியர் மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ii. மாநகர சபையின் நிறைவேற்றுத் தரத்தில் இருந்து சிறிய ஊழியர்கள் வரையான பதவிகளில் சிற்றூழியர் வரையான பாதவிகளின் வெற்றிடத்தினை அடிப்படையாகக் கொண்டு ‘‘ஊழியத்தைக் கொள்வனவு செய்யும் அடிப்படை’’ எனக் குறிப்பிட்டு அத்திட்டத்தின் அடிப்படையில் நாளாந்த சம்பளம் செலுத்தும் முறையில் 409 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு 2023 ஜுன் 30 ஆந் திகதி வரையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டுக்காக அந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்காக செலுத்தப்பட் சம்பளம் ரூபா 219,066,660 ஆகும். | மேற்படி | முறையற்ற ஆட்சேர்ப்பினைத் தடுத்து முறையான பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) வெள்ளவத்தை பொதச் சந்தையில் நான்காவது மாடியின் கடை ஒன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த ரூபா 327,030 பெறுமதியான பத்திரிகைகள், நாளிதழ்களின் இருப்பொன்று களவாடப்பட்டமை தொடர்பாக கல்கிஸ்ஸ நீதவான் நீதிமன்றத்தில் தவறை ஏற்றுக் கொண்ட பொதுச் சந்தையில் சேவையில் ஈடுபட்டிருந்த தொழிலாளரால் பெறுமதி மாநகர சபைக்கு செலுத்தியதன் காரணமாக 06 மாதங்கள் கடினமான வேலையுடன் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு 05 வருடங்களில் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தொழிலாளருக்கும், வெள்ளவத்தை பொதுச் சந்தையில் சேவையில் ஈடுபட்டிருந்த சந்தையின் நிருவாகத் தரப்பினர் இருவருக்கும் மற்றும் ஐந்து தொழிலாளருக்கும் எதிராக முறையான விசாரணை மேற்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | தவறிழைத்த ஊழியர் தொடர்பாக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி ஆணையாளரால் 2020 ஆகஸ்ட் 27 ஆந் திகதி இலக்கம் LGD/09/2019(1) என்ற உள்ளூராட்சி நிறுவனங்களின் கணக்குகளை பேணிச் செல்லல் தொடர்பான சுற்றறிக்கையின் மூலம் நிரற்படுத்தப்பட்ட மாதிரிப் படிவங்களின் பிரகாரம் மாநகர சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற வருடாந்த பாதீட்டில் சமர்ப்பிக்க வேண்டிய ஆதனங்கள் 2023 | பதிலளிக்கப்படவில்லை | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் மாநகர சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

ஆம் ஆண்டின் பாதீட்டு ஆவணங்களுடன் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்த பாதீடு கணக்கீட்டு நியமத்துடன் இணங்கி இந்த சுற்றறிக்கையின் மூலம் குறித்துரைக்கப்பட்டுள்ள குறியீட்டு இலக்கம் மற்றும் மாதிரி படிவத்தைப் பயன்படுத்தி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 ஆம் ஆண்டிற்காக 33 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 13 அறிக்கைகளுக்காக பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. உள்ளக் கணக்காய்வாளர் வழங்கிய 33 பரிந்துரைகளில் 02 பரிந்துரைகள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை | உள்ளகக் கணக்காய்வாளரின் பரிந்துரை அமுல்படுத்தப்படல் வேண்டும். |